செ.வெ.எண்: 61 நாள்: 24.01.2017

**இலுப்பூரில் ரூ.262.67 இலட்சம் மதிப்பீட்டில் அரசு மகளிர் உயர்நிலைப்பள்ளிக்கு புதிய கட்டிடம் எழிலுற கட்டப்பட்டுள்ளது - மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் தகவல்.**

புதுக்கோட்டை மாவட்டம், இலுப்பூர் பேரூராட்சியில், பொதுப்பணித்துறையின் மூலம் புதிதாக கட்டப்பட்ட அரசினர் மகளிர் உயர்நிலைப்பள்ளி கட்டிட கட்டுமானப் பணியினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இதில் புதிதாக கட்டப்பட்ட கட்டிட கட்டுமானப்பணியினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் அவர்கள் ஆய்வு செய்து கூறியதாவது:

தமிழகஅரசு பள்ளிக்கல்வித்துறையின் கீழ் பல்வேறு திட்டங்களை அறிமுகப்படுத்தி செயல்படுத்தி வருகிறது. அதனடிப்படையில் நமது மாவட்டத்தில் இலுப்பூர் பேரூராட்சியில் பொதுப்பணித்துறையின் மூலம் ரூ.262.67 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட அரசு மகளிர் உயர்நிலைப்பள்ளி கட்டிட கட்டுமானப் பணி பார்வையிட்டு ஆய்வு செய்யப்பட்டது. புதிதாக கட்டப்பட்ட அரசு மகளிர் உயர்நிலைப்பள்ளி கட்டிடம் இரண்டு கட்டிடங்களாக கட்டப்பட்டுள்ளது. இதில் முதல் கட்டிடம் இரண்டு தளங்களை கொண்டது. இதன் தரைத்தளம், முதல்தளம் மற்றும் இரண்டாம் தளங்களில் முறையே 4 வகுப்பறைகளுடன் என மொத்தம் 12 வகுப்பறைகளுடன் கட்டப்பட்டுள்ளது. இதன் ஒவ்வொரு தளங்களும் முறையே 294.46 ச.மீ பரப்பளவு கொண்டதாகும்.

மேலும் மற்றொரு கட்டிடம் இரண்டு தளங்களை கொண்டு கட்டப்பட்டுள்ளது. இதன் தரைத்தளத்தில் 2 வகுப்பறைகளும், 2 அறிவியல் ஆய்வகங்களும், இதன் முதல் தளத்தில் 4 வகுப்பறைகளும் கொண்டு கட்டப்பட்டுள்ளது. இதன் ஒவ்வொரு தளங்களும் முறையே 294.46ச.மீ பரப்பளவு கொண்டதாகும். இதே போன்று மூன்று கழிவறைகள், மிதிவண்டி நிறுத்துமிடம், ஆழ்துறை கிணறுடன் கூடிய குடிநீர் வசதி மற்றும் நடைபாதை தளம் உள்ளிட்ட பல்வேறு நவீன வசதிகளுடன் எழிலுற கட்டப்பட்டுள்ளது. இதன் மூலம் இப்பகுதியில் கல்வி பயிலும் மாணவிகள் போதிய இட வசதியுடன் சிறப்பாக கல்வி கற்பதுடன் நீண்ட நாள் கோரிக்கை நிறைவேற்றப்பட்டுள்ளது. மேலும் இந்த ஆய்வின் போது நடைபாதை பணியினை விரைவாக முடிக்க சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது என்றும் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் கூறினார்.

இந்த ஆய்வில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.அ.ராமசாமி, பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் திரு.செங்குட்டுவேல், வருவாய் கோட்டாட்சியர் திரு.வடிவேல்பிரபு, முன்னாள் இலுப்பூர் பேரூராட்சித்தலைவர் திரு.குருபாபு, மதர் தெரஸா கல்வி நிறுவனங்களின் தாளாளர் திரு.சி.உதயக்குமார், கூட்டுறவு சங்கத்தலைவர் திரு.வி.ராமசாமி, ஆத்மா குழுத்தலைவர் திரு.சாம்பசிவம், கூட்டுறவு சங்கத்தலைவர்கள், முன்னாள் உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**